[11th November 1957

SRI S. NAGARAJA MONIGAR : சபாநாயகர் அவர்களே, சிப்பந்திகளை வைத்து கடை நடத்துபவர்களை தவிர சொந்தக்காரர்களே வெற்றிலை பாக்கு மற்றும் மளிகைகடை முதலிய கடைகள் வைத்து நடத்துபவர்கள் ஒரு குறிப்பிட்ட நேரம் என்று இல்லாமல் பகலிலும் இரவிலும் கடையை திறந்துவைத்து வியாபாரம் செய்துவருகிறார்கள். அவ்விதம் செய்து வருவதால் சில ஊர்களில் பல இடைஞ்சல்கள் பொதுமக்களுக்கு ஏற்படுகிறது என்பது சர்க்காருக்குத் தெரியுமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : ஸார், இது கடை சிப்பந்திகளை குறித்த சட்டம். இது கடை சொந்தக்காரர்களை வரையறுக்கக்கூடிய சட்டமல்ல. தானே கஷ்டப்பட்டு உழைத்து தனது வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்கு பாடுபடுகிறார்கள் என்றால் அதை கனம் அங்கத்தினர் அவர்களை மறுக்க மாட்டார்கள் என்று நம்புகிறேன்.

SRI K. VINAYAKAM : அப்படி தனியார் கடைகளை அதிக நேரம் வைத்திருப்பதினால் பலருக்கு லாபம் வருகிறது, அதாவது சினிமாவுக்கு போய்விட்டு வருபவர்களுக்கு டீ குடிப்பதற்கும், பீடி, சிகரட் வாங்குவதற்கும் இந்த கடைகள் பயன்படுகிறது என்பது சர்க்காருக்கு தெரியுமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : இவ்விதம் கடை வைத்திருப்பவர்களைப் பற்றி அரசாங்கத்திற்கு தெரியுமோ, தெரியாதோ, மெம்பர் அவர்களுக்கு தெரிந்திருப்பதைப்பற்றி மகிழ்ச்சியடைகிறேன்.

SRI M. KALYANASUNDARAM : இப்போது தயாரிக்கப்பட்டிருக்கும் இந்த நகல் மசோதா இன்னும் மத்திய சர்க்காருக்கு அனுப்பி அங்கீகாரம் பெற வேண்டியிருக்கிறதா அல்லது இந்த சர்க்காரே நேரிட்டு கொண்டு வரமுடியுமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : கன்கரண்ட் லிஸ்டில் சேர்க்கப்பட்டிருக்கிற எல்லா மசோதாக்களையும் மத்திய அரசாங்கத்திற்கு அனுப்பி திருப்பி வந்தபின் தான் இங்கு கொண்டு வர முடியும். அதற்கு முன்னால் நமக்கு இதை ஆலோசித்து திருத்தி கொள்ளவேண்டும்.

MR. SPEAKER : My congratulations to the hon. Member Sri Vinayakam for putting the question in the form of a question. Questions are over.

[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

II.—ANNOUNCEMENT BY THE HON. SPEAKER *RE.* AMENDMENTS TO THE MADRAS MONEY LENDERS BILL, 1957.

MR. SPEAKER : I fix 3-30 p.m. to-day as the time before which amendments to the Madras Money Lenders Bill, 1957, should be given.

III.—PRESENTATION OF SUPPLEMENTARY STATEMENT OF EXPENDITURE FOR THE YEAR 1957–58.

THE HON. SRI C. SUBRAMANIAM : Mr. Speaker, Sir, I rise to present the Supplementary Statement of Demands for Grants for the current financial year 1957–58 and the Detailed Estimates thereof. As explained in the Introductory Memorandum, the present Supplementary Statement relates mainly to New Service Schemes which were sanctioned by the Government in the course of the current year and which could not be provided for in the Revised Budget Estimates. Provision has also been made in a few cases for expenditure which is likely to exceed the provision made in the Revised Budget.